# அ. சோழர்கால வரலாறு

## 1. விஜயாலயன்முதல் பராந்தகன்வரை

1. முதலாம் பராந்தக சோழனின் சாதனைகலளப்பற்றிச் சுருக்கி எழுதுக.

1. **விஜயாலய சோழன் :** 'தொண்ணூற்றாறு புண்களை மார்பிலே கொண்டவன்' என்று இவனை மூவருலா புகழ்ந்து பேசும். இவனே சோழப் பேரரசை நிறுவியவனாவான்.

2. **ஆதித்திய சோழன் ;** இராஜகேசரி பட்டம் புனைந்த இவன் காலத்தில் தெற்கே சுசீந்திரம், குற்றாலம் வரை ஆட்சி புரிந்தான் என்று தெரிகின்றது.

### 3. முதலாம் பராந்தக சோழன் (907—990)

பரகேசரி பட்டம் பெற்று ஆட்சி ஏறிய பராந்தகன் , அவனது மூன்றாண்டு ஆட்சிக் காலத்திலேயே பாண்டிய நாட்டைத் தாக்கி '**மதுரை கொண்ட**' என்ற பட்டத்தைப் பெற்றான். ஈழத்தையும் வென்றதனால் இவன் '**மதுரையும் ஈழமும் கொண்டான்**' என்று 37 ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்களில் போற்றப்படுகிறான். இராட்டிரகூட மன்னனை வென்று '**வீரசோழன்**' என்ற பட்டமும் பெற்றான். மற்றும் பண்டித வத்சலன், சங்கிராம ராகவன், இருமுடிச் சோழன் போன்ற பட்டங்களைப் பெற்ற இவன், தன்னைச் 'சிவனது பாதத் தாமரையில் உறையும் வண்டு,' எனக் கூறிக்கொள்கிறான் (திருவாலங்காட்டுச் செப்பேடு).

### இலங்கையுடன் உறவு

மூன்றாம் இராசசிம்ம பாண்டியனை கி.பி. 910-ல் இவன் தோற்கடித்தான். அப் பாண்டியன் இலங்கை மன்னனான ஐந்தாம் காசிபனைத் துணைக்கு வேண்டினான். காசிபன் ஒரு பெரும் படையை சக்க சேனாபதி தலைமையில் அனுப்பிப் பாண்டியனுக்கு உதவினான். இரு படைகளும் பராந்தகனை வெள்ளூர் என்ற இடத்தில் எதிர்த்தன. ஆனால் அவைகள் தோற்கடிக்கப்பட்டன. இப்போரின்பொழுது பழுவேட்டரை

யன், கண்டன் அமுதன், கொடும்பாளூர்க் குறுநில மன்னர் ஆகியோர் பராந்தகனுக்கு உதவிபுரிந்தனர்.

இரு வாணர்களை வல்லத்தில் தோற்கடித்துப் பராந்தகன் வெற்றிபெற்றான் என உதயேந்திரம் பட்டயங்கள் கூறுகின்றன. இரு வாணர்களைப் பற்றிப் பெயர்களில் கருத்து வேறுபாடுகள் இருப்பினும் அவர்கள் இரண்டாம் விஜயாதித்தன், இரண்டாம் விக்கிரமாதித்தன் ஆகிய இருவரே என்று கூறலாம்.

**இராட்டிரகூடர் உறவு:** இராட்டிரகூடருடன் நெருங்கிய வகையில் பராந்தகன் திருமண உறவு பூண்டான். தன் மகளான வீரமாதேவியை இந்திரன் மகனான நான்காம் கோவிந்தனுக்குத் திருமணம் செய்வித்தான்; அவன் திறமையற்றவன். சாளுக்கியரின் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டுத் தோல்விகண்டான். பின்னர் மூன்றாம் அமோகவர்ஷன் இராட்டிரகூட மன்னனானான். கோவிந்தன் சோழநாடு வந்தான். அமோகவர்ஷன் இறந்த பிறகு மூன்றாம் கிருஷ்ணன் இராட்டிரகூட மன்னனானான். ஆனால் மூன்றாம் கிருஷ்ணன் கங்க நாட்டுப் பூதுகனின் (அவன் தமக்கையின் கணவன்) உதவியுடன் சோழப்படையைத் தோற்கடித்தான். இதன்பின்னர் நான்காம் கோவிந்தனைப் பற்றி ஏதும் அறிய முடியவில்லை. வாணரும் வைதுகரும் இராட்டிரகூடர்பக்கம் சேர்ந்தனர். இவ்வாறாக வட பகுதியில் இருந்த மன்னர்களும் குறுநில மன்னர்களும் சோழனை எதிர்க்கலாயினர். இச்சூழ்நிலையில் பராந்தகன் தனது மகன் இராஜாதித்தன் தலைமையில் ஒரு படையைத் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருநாவலூரில் இருக்கவைத்து, வட எல்லையைப் பாதுகாத்தான், அவனுக்கு உதவியாக அரிகுலகேசரியும் அங்கேயே சென்று தங்கினான். இவ்வாறு இருதரப்பினரும் தங்களது படைகளைப் பெருக்கிக்கொண்டே சென்றனர் இறுதியில் போர் தவிர்க்கமுடியாததாயிற்று. இருவருக்கும் தக்கோலம் என்ற இடத்தில் 949-ல் போர் நடைபெற்றது. அப்போரில் இரண்டாம் பூதுகனின் அம்பிற்கு யானைமீதிருந்த இராஜாதித்தன் இரையாகிக் கொல்லப்பட்டான்.

இவ்வாறு, முதலாம் இராஜராஜன் ஆட்சிக்கு வரும்வரை சோழப் பேரரசு, படை வலிமையிழந்து காணப்பட்டது. கண்டராதித்தன் (956—957), அரிஞ்சிய சோழன் (956—957), உத்தம சோழன் சுந்தர சோழன் ஆகியோர் ஆட்சிக்குப் பிறகு முதலாம் இராஜராஜன் அரியணையேறினான்.

# 2. முதலாம் இராஜராஜன்*

**[கி. பி. 985—1014]**

1. முதலாம் இராஜராஜ சோழனின் படையெடுப்புகளையும் அரும்பணிகளையும்பற்றி விளக்குக.

முதலாம் பராந்தக சோழனது ஆட்சிக்காலம் முதல் உத்தம சோழன் ஆட்சிக்காலம்வரை வலிமைகுன்றி—வனப்பின்றிக் காணப்பட்ட சோழப் பேரரசு, முதலாம் இராஜராஜன் காலம் முதல் பெரும் மலர்ச்சியடைந்தது. நாட்டின் எல்லைகள் பெருக்கப்பட்டன; கடல்கடந்து படையெடுப்பு மேற்கொள்ளப் பட்டது; கலைகளும் இலக்கியங்களும் முன்னேற்றம் கண்டன; சமயம் மிக உன்னத நிலையை அடைந்தது.

2. **பிறப்பு :** இரண்டாம் பராந்தக சோழனுக்கும் வானவன் மாதேவியாருக்கும் ஐப்பசித் திங்கள் சதய நன்னாளில் பிறந்த இராஜராஜனின் இயற்பெயர் அருண்மொழிவர்மன் என்பதாகும். இராஜகேசரி என்ற பட்டம் புனைந்த இவன் இராஜராஜன் என்று மூன்றாம் ஆட்சியாண்டுமுதல் அழைக்கப்பட்டான்.

2. **மெய்க்கீர்த்தி :** தன்னுடைய ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற வரலாற்று உண்மை நிகழ்ச்சிகளை விளக்கும் மெய்க் கீர்த்தியை அகவற்பாவில் அமைத்துத் தன் கல்வெட்டுக்களின் தொடக்கத்தில் பொறிக்கும் முறையை இராஜராஜசோழன் மேற் கொள்ள ஆரம்பித்தான். இராஜராஜனின் மெய்க்கீர்ததி 'திருமகள்போல' என்று தொடங்கும். அவனது மெய்க்கீர்த்தி மூலம் அவன் காலத்தில் நடைபெற்ற போர் நிகழ்ச்சிகளைக் காணலாம் :

"திருமகள்போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே யுரிமை பூண்டமை மனங்கொள
காந்தளூர்ச் சாலைக் கலமறுத் தருளி
வேங்கைநாடுங் கங்கபாடியுந்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலைநாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்கள ஈழமண்டலமும்
இரட்டபாடி யேழரை யிலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமுந்
திண்டிறல் வென்றித் தண்டாற்கொண்டதன்

---

* சென்னை தொலைக்காட்சியில் மாமன்னன் இராஜராஜன் என்ற தலைப்பில் இராஜராஜனின் ஆயிரமாவது ஆண்டு விழாவினையொட்டி டாக்டர் A. சுவாமிநாதன் எழுதி இயக்கி வழங்கியது.

ணெழில்வள ரூழியுள் எல்லா யாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோ ராசகேசரி வர்மரான
உடையார் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு.''

**3. காந்தளூர் :** காந்தளூர் சாலை எனப்படும் பகுதி தற்போது வலியசாலை என்ற பெயரில் திருவனந்தபுரத்தி லுள்ளது. சேர நாட்டை பாஸ்கர ரவிவர்மன் என்பவன் ஆண்டு வந்தான். இராஜராஜ சோழன் அனுப்பிய தூதுவனை அச் சேர மன்னன் அவமதித்து, அவனை உதகையில் சிறையிட்டான் என்றும், அதனால் இராஜராஜன் போர் தொடுத்தான் என்றும் விக்கிரம சோழன் உலா மூலம் அறியலாம். இராஜராஜன் பெரும் படையுடன் பாண்டிய நாட்டைக் கடந்து காந்தளூர் நோக்கிச் சென்றான். அப்போது பாண்டியன் அமரபுயங்கன் எதிர்ப்புத் தெரிவிக்கவே அவனையும் வென்று காந்தளூரிலிருந்த சேர மன்னனது கலங்களை அழித்து வெற்றிபெற்றான். பின்னர் உதகை சென்று தூதுவனை விடுவித்து அரும் பெரும் பொற் குவியலையும், களிற்று நிலைகளையும் கொண்டுவந்தான்.

**4. கொல்லம் :** இரண்டாம் முறையாகச் சேரநாட்டின்மீது படையெடுத்துக் கொல்லத்தைக் கைப்பற்றினான். கொல்லத் தையும், அதனைச் சார்ந்த கொடுங்கோளூரையும் வென்றதால் கீர்த்தி பராக்கிரமன் என்ற பெயர் பெற்றான்.

**5. குடமலை நாடு :** தற்போது குடகு என வழங்கப்பெறும் குடமலைநாட்டை கொங்காள்வார் மரபின் ஒருவன் ஆட்சி செய்துகொண்டிருந்தான். இராஜராஜன் அவனையும் தோற் கடித்துப் புறமுதுகிடவைத்தான்.

**6. கங்கபாடி, நுளம்பப்பாடி, தடிகைப்பாடி :** சேலம் மாவட்டத்தின் வடபகுதியான கங்கபாடிப் பகுதியை மேலை கங்கர்கள் ஆட்சி செய்து வந்தனர். தழைக்காடு அதன் தலை நகராகும். கருநாடக மாநிலத்தின் கீழ்ப்பகுதியையும், பல்லாரி மாவட்டத்தையும் கொண்ட நுளம்பப்பாடியைப் பல்லவரின் ஒரு கிளையினரான நுளைநுளம்பர் ஆண்டுவந்தனர். இவ்விரு பகுதி களையும் ஆறாம் நூற்றாண்டில் எளிதில் கைப்பற்றி இறுதியில் தடிகைப்பாடியையும் இராஜராஜன் கைப்பற்றினான். இதன் வெற்றிக்கு இராஷ்டிரகூடர்கள் வலிமைகுன்றிக் காணப்பட்டதே காரணமாகும்.

**7. ஈழப் படையெடுப்பு :** வடக்கே போர்புரிந்து வெற்றி வாகைசூடிய இராஜராஜன் இலங்கையின்மீது படையெடுக்க

வேண்டியது தவிர்க்கமுடியாததானது. அப்பொழுது இலங்கையை ஆண்டுவந்த மன்னன் ஐந்தாம் மகிந்தன் என்பவனாவான். அவன் பாண்டியனுக்கு உதவிபுரிந்தான் என்ற காரணத்தால் இராஜராஜன் தன் மைந்தன் இராஜேந்திரனைப் பெரும் படையுடன் அங்கு அனுப்பிப் போர்புரியவைத்தான். இராஜேந்திரனின் ஆற்றலுக்கு அஞ்சிய இலங்கை மன்னன் தென் பகுதியிலுள்ள ரோகண நாட்டிற்குத் தப்பி ஓடிவிட்டான். இதனால் இலங்கையின் வடபகுதி முழுவதும் எளிதாகக் கைப்பற்றப்பட்டு, அதற்கு மும்முடிச் சோழமண்டலம் எனப்பெயரிடப்பட்டது. இலங்கையின் தலைநகரான அநுராதபுரம் அழிக்கப்பட்டது; நாட்டின் நடுவிலிருந்த பொலனருவா என்ற நகரம் ஜனநாதமங்கலம் என்று பெயரிடப்பட்டது. இலங்கையில் கிடைக்கும் கல்வெட்டு மூலம், சோணாட்டுத் தலைவன் ஒருவன் மாதோட்ட நகரத்தில் இராஜராஜேச்வரம் என்ற சிவாலயத்தினை எடுப்பித்து அர்த்தயாம வழிபாட்டுற்கும் வைகாசித் திருவிழாவிற்கும் நிலதானம் அளித்தனன் என அறியலாம்.

8. **சாளுக்கியருடன் போர் :** சத்தியாசிரயன் மேலைச் சாளுக்கிய மன்னனான இரண்டாம் தைலபனின் புதல்வனாவான். தைலபனின் மறைவிற்குப்பின் இரட்டைப்பாடி ஏழரை இலக்கத்திற்குச் சத்தியாசிரயன் மன்னனானான். அவனை வென்று நுளம்பப்பாடியை இராஜராஜன் கைப்பற்றினான். இப் படையெடுப்பின் விளைவாகப் பெரும் பொருளைக் கவர்ந்துகொண்டுவந்த இராஜேந்திரனின் வீரர்கள் தாம் படையெடுத்த நகரங்களைக் கொளுத்தியும் பெண்களைக் கற்பழித்தும், இளம் குழந்தைகள், வயதானோர் என்று பாராமல் கொலை செய்தும், சோழர் குலப் படையெடுப்பின் மாட்சிமையைக் குறைத்துவிட்டனர்.

9. **வேங்கிநாட்டுப் போர் :** வேங்கி நாட்டின்மீது படையெடுப்பதற்குமுன்பு சீட்புலி நாடு, பாகி நாடு ஆகியவற்றைக் கைப்பற்றி அவற்றைத் தன் நாட்டுடன் இணைத்துக்கொண்டான். பின்னர் வேங்கி நாட்டின்மீது படையெடுத்துச் சென்று ஜடா சோழ வீமனைப் போரில் தோற்கடித்து, தன்னிடம் அடைக்கலம் பெற்றிருந்த சக்திவர்மனை வேங்கி நாட்டின் மன்னனாக முடிசூட்டினான். ஆனால் ஜடா சோழ வீமன் கலிங்க நாட்டு மன்னனின் உதவியுடன் சக்திவர்மனைத் தோற்கடித்துக் காஞ்சிவரை படையெடுத்தான். இராஜராஜன் பெரும் சீற்றமுற்று வீமனைக் காஞ்சியில் போரிட்டுக் கொன்று, மீண்டும் சக்திவர்மனை வேங்கி நாட்டு மன்னன் ஆக்கினான். அதுமுதல் கீழைச் சாளுக்கியர்கள் நிலையாக ஆளத்தொடங்கினர்.

சக்திவர்மனுக்குப் பிறகு அவனது சகோதரன் விமலாதித்தன் இளவரசனாகப் பட்டம் சூட்டப் பெற்றான். இராஜராஜனின் இத்தகைய பரிவிற்கும் பாசத்திற்கும் முக்கியக் காரணம் அவனுடைய புதல்வி குந்தவையை விமலாதித்தனுக்குத் திருமணம் செய்து கொடுத்திருந்ததே.

**10. கலிங்க நாடு :** கோதாவரியாற்றிற்கும் மகாநதிக்கும் இடையே உள்ள கீழ்க்கடலைச் சார்ந்த பகுதியே கலிங்கமாகும். அப்பகுதியை விமலாதித்தன் என்னும் குலூதம வேந்தன் ஆண்டுவந்தான். இராஜேந்திரன் அவனைப் போரில் வென்று, மகேந்திரகிரியில் ஒரு வெற்றித்தூணை நிறுவினான்.

**11. முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரத்தையும்** கைப்பற்றும் பொருட்டு இராஜராஜன் ஒரு பெரும் படையெடுப்பை மேற்கொண்டு, அரபிக் கடலிலுள்ள மாலத் தீவுகளை அடக்கித் தன் பெருமையை நிலைநாட்டினான்.

எத்திசையும் வெற்றி பெற்று ஏற்றமிகு ஆட்சிசெய்த இராஜராஜனின் ஆட்சியின்கீழ்ப் பாண்டி மண்டலம், சேர மண்டலம், தொண்டை மண்டலமாகிய ஜெயங்கொண்ட சோழமண்டலம், கங்க மண்டலம், கொங்குமண்டலம், நுளம்பப்பாடி, கலிங்கநாடு, இலங்கையாகிய மும்முடிச் சோழமண்டலம் ஆகியவை இருந்தன.

**சிறப்புப் பெயர்கள் :** இராஜராஜன் என்ற பெயரைத் தவிர க்ஷத்திரிய சிகாமணி, உய்யக்கொண்டான், பாண்டிய குலாசினி, கேரளாந்தகன், சிவபாத சேகரன், சிங்களாந்தகன், மும்முடிச் சோழன், நிகரிலிச் சோழன், இராச மார்த்தாண்டன் போன்ற பல பெயர்கள் அவனுக்கு வழங்கப்பட்டிருந்ததைக் கல்வெட்டுக்களின்மூலம் அறியலாம். அப் பெயர்களைத் தாங்கிப் பல ஊர்களும், ஆறுகளும், கோயில்களும் இன்றளவும் இருப்பதை நாம் காண்கிறோம்.

**இராஜராஜேச்சுரம் :** பல நாடுகளைக் கைப்பற்றிப் பெரும் புகழ்பெற்ற இராஜராஜன் தலைநகரிலே ஒரு பெரும் கோயில் கட்டினான். அங்கு காணப்படும் கல்வெட்டொன்றில், " பாண்டிய குலாசனி உள்நாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்து நாம் எடுப்பித்த திருக்கற்றளி இராஜராஜேஸ்வரம் " என்று கோயில் அமைந்த இடம் கூறப்பட்டுள்ளது. (இக்கோயிலின் கட்டிடக் கலைச் சிறப்பினைத் தனியே காணலாம்.) இப் பெருவுடையார் மீது கருவூர்த்தேவர் ஒரு பதிகம் பாடியுள்ளார். அது சைவத் திருமுறைகள் ஒன்பதனுள் சேர்க்கப்பட்டுள்ளது.

இராஜராஜனுக்கு 15 மனைவியர் இருந்தனர். அவ... கோயில்களுக்குத் தானம் அளித்த செய்திகளைப் பற்றிக் கூறப் பட்டுள்ளது. அவர்களுள் உலோக மாதேவியார் பட்டத்தரசி யாக இருந்தாள். அபிமானவல்லி, வில்லவன் மாதேவி, வீர நாராயணி, திரைலோக்கியமாதேவி, மீனவன்மாதேவி, வானவன் மாதேவி போன்றோரின் கொடைச்சிறப்புகள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. கி. பி. 1012-ல் தன்னுடைய புதல்வனான மதுராந்தகனுக்கு இராஜராஜன் இளவரசுப் பட்டம் கட்டி, இராஜேந்திரன் என்ற அபிடேக நாமமும் சூட்டினான்.

வளமையும் வனப்பும்மிக்க தமிழகம், வலிமையும் வளர்ச்சியும் பெற்று, புதுப்பொலிவும் பேரெழிலும் கண்டு புதுயுகத்தைப் படைத்து, தமிழகத்தின் மாண்பினையும் கலைவளர்ச்சியையும் இன்றளவும் நிலைபெற்றுப் பேச வழிவகுத்தவர் மாமன்னர் இராஜராஜசோழர் ஆவார்.

# 3. முதலாம் இராஜேந்திரன்

## (1012-1044)

**3. முதலாம் இராஜேந்திர சோழனின் படையெடுப்பு களையும் சாதனைகளையும்பற்றி விளக்கி எழுதுக.**

பரகேசரி என்கின்ற பட்டம் பெற்று அரியணையேறிய இராஜேந்திரன் தன் தந்தையின் காலத்திலேயே பல போர்களில் ஈடுபட்டுப் பெரும் வெற்றிகளை அடைந்து, சோழப் பேரரசின் பெருமையையும் வலிமையையும் உயர்த்தினான். மதுராந்தகன் என்ற இயற்பெயர் கொண்ட அவனுக்கு இராஜேந்திரன் என்ற அபிடேக நாமம் சூட்டப்பட்டது.

1. **படையெடுப்புகள் :** முதலாம் இராஜராஜன் காலத்தி லேயே பல போர்களில் ஈடுபட்டு வெற்றி வாகை சூடி, சோழப் பேரரசின் பெருமையை உயரச்செய்த இராஜேந்திரன் பல படையெடுப்புகளை மேற்கொண்டு வடக்கே கங்கைவரையிலும் தெற்கே கடாரம்வரையிலும் போர்புரிந்து, கிழக்கேயுள்ள வங்காள விரிகுடாக் கடலைச் சோழர்களின் ஏரியாகத் தோற்று வித்து, அதனையும் சோழர்களுக்கே உரியதாக்கினான் என்றால், அவனது திட்டத்தையும் சீரிய ஆட்சி முறையையும், போர்த் திறமையையும் எவ்வாறு எடுத்துரைப்பது ? அவனது வெற்றிகளைக் குறிப்பிடும்வகையில் பல மெய்க்கீர்த்திகள் அவனது மூன்றாம் ஆண்டுமுதல் காணப்படுகின்றன. அக்

கல்வெட்டில் இடைத்துறை நாடு, வனவாசி, கொள்ளிப்பாக்கை, மண்ணைக் கடக்கம் போன்ற ஊர்களை இராஜேந்திரன் வென்றான் எனக் கூறப்பட்டுள்ளது. கிருஷ்ணா–துங்கபத்திரை ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதியே இடைத்துறை நாடு; மற்றவை மேலைச் சாளுக்கியர் ஆட்சிக்கு உட்பட்டவை. இப் போர்கள் இராஜராஜன் காலத்தில் நடைபெற்றவை என்பதால் இவனது ஆரம்ப காலத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

2. **ஈழநாட்டுப் போர் :** ஈழ மண்டலத்துப் போர் இவனது ஐந்தாம் ஆண்டில் நடைபெற்றது. இராஜராஜனால் தோற்கடிக்கப்பட்டுத் தென்பகுதிக்கு ஓடிய இலங்கை மன்னனான ஐந்தாம் மகிந்தன் இராஜேந்திரன் காலத்தில் ரோகண நாட்டிலிருந்து பெரும்படையுடன் மீண்டும் சோழர் வசமிருந்த இலங்கையின் வடபகுதியைக் கைப்பற்ற முயன்றான். ஆனால் இராஜேந்திரன் அவனைத் தோற்கடித்து, இலங்கை அரசின் வழிவழிவந்த சிறந்த அழகிய முடியினையும், அவனது தேவியினுடைய அழகிய முடியினையும் கைப்பற்றியதோடு நில்லாமல், இலங்கை மன்னனிடம் பாண்டியர் அடைக்கலம் வைத்த சுந்தர மணி முடியும் (முதலாம் பராந்தகன் கைப்பற்ற நினைத்து முடியாமற் போன கிரீடம்). இந்திரனின் ஆரத்தையும் கைப்பற்றி மீண்டான். அஞ்சி ஓடிய மகிந்தனையும் சிறைப் படுத்தி சோழ நாட்டிற்கு அனுப்பிவிட்டான். சோழ நாட்டில் சிறைப்படுத்தப்பட்ட மகிந்தன் பன்னீராண்டு கழித்து மடிந்து போயினன் என்று கூறப்பட்டுள்ளது. கோனேரிபுரக் கல்வெட்டின்மூலம் ஈழ மண்டலம் முழுவதும் சோழர்வசம் ஆகியதை உறுதிப்படுத்தலாம்:

“ பொருகட லீழத் தரசர்தம் முடியும்
ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும்
முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த
சுந்தர முடியும், இந்திரன் ஆரமும்
தெண்டரை ஈழ மண்டல முழுவதும்...”

3. **சேரநாட்டுப் போர் :** சேர நாட்டின்மீது படையெடுத்து சேர நாட்டினருக்கு வழிவழி வந்த மணிமுடியையும், நவரத்தின மாலையையும் கைப்பற்றிக்கொண்டான். பழந்தீவையும் கைப் பற்றிக்கொண்டு யாரும் நெருங்குதற்கரிய அரண்களையுடைய சாந்திமத் தீவினில் வைக்கப்பட்டிருந்த செம்பொன் முடியையும் கவர்ந்துவந்தான் எனக் கூறப்படுகின்றது.

4. **பாண்டியநாட்டுப் போர் :** பாண்டிய நாட்டுடன் போர் புரிந்து அங்கு ஓர் அரண்மனை எடுப்பித்து, அதில் சோழ

பாண்டியன் என்ற பட்டத்துடன் தன் மகனான சுந்தரசோழ னுக்கு சடையவர்மன் சுந்தரசோழ பாண்டியன் என்ற பெயர் சூட்டி, அங்கிருந்து ஆட்சி புரியவைத்தான். பின்னர் அவனுக்குச் சேர நாட்டையும் ஆட்சிபுரிய உரிமை வழங்கினான்.

**5. மேலைச் சாளுக்கியருடன் போர்:** கி. பி. 1016-ம் ஆண்டு மேலைச் சாளுக்கிய மன்னன் ஐந்தாம் விக்கிரமாதித் தனின் தம்பியான ஜெயசிங்கன் என்பவன் பட்டமெய்தினான். உடன் சோழரிடமிருந்து சில பகுதிகளைப் படையெடுத்து, வென்று தன் நாட்டுடன் இணைத்துக்கொண்டான். இராஜேந் திரன் பெரும் படையுடன் காஞ்சியிலிருந்து சென்று, ஜெயசிங்கனை முயங்கியில் வென்று, பெரும் மணித்திரளையும் பொற்குவியலகளையும் கைப்பற்றிக்கொண்டு வெற்றியுடன் தன் நாடு திரும்பினான்; பின்னர் இரட்டப்பாடி இலக்கத்தை வென்றான்.

**6. கீழைச் சாளுக்கியப் போர்:** இராஜராசனின் மருமக னான விமலாதித்தனைப் பற்றி அவனது மகன் இராஜராஜ நரேந்திரன் 1019-ல் பட்டமெய்தினான். ஆனால் மேலைச் சாளுக்கிய மன்னன் ஜெயசிங்கன், தன் மாற்றாந்தாய் மகனான ஏழாம் விஷ்ணுவர்த்த விஜயாதித்தனை மன்னனாக்கி அரசுநடத்த முயற்சி செய்தான். இறுதியில் நரேந்திரன், இராஜேந்திரனின் உதவியை நாடினான். விக்கிரம சோழிய வரையன் என்ற சோழர் தளபதி தலைமையில் சென்ற சோழர் படை மேலைச் சாளுக்கியரைப் புறமுதுகிடச் செய்ததோடு, வடபகுதியில் மேலும் படையெடுத்து கங்கைவரை போர் நடத்தியது; இதன் காரணமாகவே படையெடுப்பு நடைபெற்றதென்று திரு சாஸ்திரி கூறுகிறார்.

**7. கங்கைப் படையெடுப்பு:** கங்கைப் படையெடுப்பில் சக்கரக் கோட்டமும், ஒட்டர தேசமும், கோசல நாடும் கைப் பற்றப்பட்டன. பின்னர் தன்மபாலனுடைய தண்ட புத்தியும், இரணசூரனது தக்கண லாடமும், கோவிந்த சந்தனுக்குட்பட்ட வங்காள தேசமும், மகிபாலன் ஆட்சிசெய்த உத்திர லாடமும் கைப்பற்றப்பட்டு சோழப்படைகள் கங்கையை அடைந்தன.

விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமும்
முதிர்பட வல்லை மதுர மண்டலமும்
காமிடை வளைநகர் நாமனைக் கோணமும்
வெஞ்சிலை வீரர் தஞ்சப் பள்ளியும்
பாசடைப் பழனி மாசுணி தேசமும்
... ... ... ...

கங்கைப் படையெடுப்பு பெரும் வெற்றியைத் தந்தது இராஜேந்திரனின் புகழும் உயர்ந்தது.

கங்கை நீரையும் பெரும் பொருளையும் கொண்டுவந்ததற்கு நினைவாக, இராஜேந்திரனின் புதிய தலைநகரில் (கங்கை கொண்ட சோழபுரம்) கங்கை நீர் கலக்கப்பட்ட சோழ கங்கப் பேரேரி அமைக்கப்பட்டது.

**8. கடாரங்கொண்டான் :** இராஜேந்திரனின் கடாரப் படையெடுப்பு கி. பி. 1025–ல் நடைபெற்றிருக்கவேண்டும். இத்தகைய நல்லுறவுமிக்க காலத்தில் இராஜேந்திரன் கடாரத்துடன் போர் புரியக்காரணம் என்ன என்று தெரியவில்லை. இருப்பினும் சோழர்களின் வாணிபத்திற்கு ஸ்ரீ விஜய அரசு இடையூறு அளித்திருக்கவேண்டும் அல்லது தன் வலிமையைத் தென்னகத்தில் நிலைநாட்டிய இராஜேந்திரன் கடல் கடந்தும் தன் வல்லமையைக் கொடிகட்டிப் பறக்கவிட முயற்சி செய்து இருக்கவேண்டும். இக் கடாரப் பகுதியைச் சோழன் வெற்றி கொண்டான் என்றபோதிலும் அவன் அதை நிரந்தரமாகத் தன்வசம் ஆக்கிக்கொள்ளவில்லை; திறைமட்டுமே பெற்றான்.

அப் படையெடுப்பின்போது ஸ்ரீ விஜயம், பண்ணை, மலையூர், மாயிருடிங்கம், இலங்காசோகம், பப்பாளம், இலிம் பங்கம், இலாமுரிசேதம், நக்கவாரம், கடாரம் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினான் எனக் குறிப்பிட்டுள்ளது. இப் பெயர்களை நோக்க இவையாவும் மலேயாவிலும் சுமத்திராவிலும், அவைகளைச் சூழ்ந்த இடங்களிலும் அமைந்து காணப்படும் பகுதிகளாகவே உள்ளன என அறியலாம்.

இராஜேந்திரன் காலத்தின் இறுதியில் அவனது மைந்தன் இராஜாதிராஜன் போர் புரிந்தான். முதலில் வேணாட்டு மன்னனை வென்று அவனைக் கொன்றான். பின்னர் கூபக நாட்டு மன்னனையும், மூஷிக மரபைச் சேர்ந்த எலிமலைக் கருகிலுள்ள இராம குடநாட்டு மன்னனையும், குழப்பம் விளைவித்த சேர, பாண்டியர்களையும் வென்றான் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

**9. இராஜேந்திரனின் சிறப்புப் பெயர்கள் :** முடிகொண்ட சோழன், உத்தம சோழன், விக்கிரம சோழன், சோழேந்திர சிம்மன், கடாரங் கொண்டான், கங்கை கொண்ட சோழன் போன்ற சில சிறப்புப் பெயர்கள் குறிப்பிடத்தக்கவை. இப் பெயர்களைத் தாங்கிப் பல கோயில்களும், ஆறுகளும், ஊர் களும் இன்றும் இருப்பதைக் காணலாம்.

**10. தலைநகர் :** தலைநகரம் நாட்டின் மத்தியப்பகுதியில் இருப்பதற்காகக் **கங்கைகொண்ட சோழபுரத்தை** இரண்டாவது தலைநகராக ஏற்படுத்தினான்.

**11. சோழ கங்கப் பேரேரி :** தலைநகருக்கும் தலைநகருக் கருகிலுள்ள சிற்றூர்களுக்கும், குடிநீர் வசதி செய்யவும், நீர்ப் பாசனம் பெருகவும் தெற்கு வடக்கில் 22 கி. மீ. நீளமுள்ள சோழ கங்கப் பேரேரியை கங்கைகொண்ட சோழபுரத்தில் தோற்று வித்தான் என்பதைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள்மூலம் அறியலாம். இவ்வேரி இன்று பொன்னேரி என்று வழங்கப்படு கின்றது.

**சைவ சமய ஈடுபாடு :** இராஜராஜனைப்போல சைவ சமய வளர்ச்சியில் இராஜேந்திரன் ஈடுபாடு கொண்டான். கங்கை கொண்ட சோழபுரத்தில் ஓர் புதிய, பெரிய கோயிலை ஏற்படுத்திப் பல நிவந்தங்களை அளித்தான். தில்லை நடராஜ ருக்குப் பல நிவந்தங்கள் அளித்தான். இவனது காலத்தில் சோழ நாட்டில் பல கோயில்கள் கற்றளிகளாக மாற்றப்பட்டன. தன்னுடைய சைவாசாரியாராக இருந்த சர்வசிவ பண்டிதருக்கு ஆச்சார்ய போகமாக ஆண்டுதோறும் இரண்டாயிரம் கலம் நெல் அளித்துவந்தான் ; காளாமுகப் பிரிவைச் சார்ந்த லகுலீச பண்டிதருக்கும் பெரும் ஆதரவளித்தான்.

பௌத்த (நாகை), வைணவ சமயங்களையும் (திருவரங்கம்) இவன் ஆதரித்தான் என்பதைச் சாசனங்கள் தெளிவுப்படுத்து கின்றன.

இராஜேந்திரனுக்கு ஐந்து மனைவியர் இருந்தனர். அருள் மொழி நங்கை, அம் மங்காதேவி என்ற இரு மகளிரும், சடைய வர்ம சுந்தர சோழ பாண்டியன் (மதுரையில் ஆண்டவன்) மற்றும் இரண்டாம் இராஜேந்திர சோழன், வீர ராஜேந்திர சோழன் என்ற இரு புதல்வர்களும் இருந்தனர் எனக் கல்வெட் டுக்கள் தெரிவிக்கின்றன.

**கட்டிடக் கலை :** (நுண்கலைகள் பிரிவைக் காண்க).

முதலாம் இராஜாதி ராஜன் : பாண்டியர், சாளுக்கியர், குந்தளர் ஆகியோருடன் போர்புரிந்து வெற்றி பெற்றான்.

இரண்டாம் இராஜேந்திரன் (1051—1063): ஈழநாடு, சாளுக் கியப் பேரரசு ஆகியவற்றின்மீது படையெடுத்து வெற்றி கொண்டான்.

**வீரராஜேந்திரன்** (1063—1070) மேலைச் சாளுக்கியன் ஆகவ மல்லனையும், பொத்தப்பிவேந்தன், கேரளன், பாண்டியன் வீரகேசரி ஆகியோரையும் வென்றான்.

அதிராஜேந்திரன் (1070): கிருமி கண்ட சோழன் என்று இவனைக் கூறுவர். இவனுடன் விஜயாலய சோழ மன்னர்கள் வரிசை முடிவுற்றது. இவனைப் பின்பற்றி சோழ, சாளுக்கிய மன்னனான முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக்கு வந்தான்.

# 4. முதலாம் குலோத்துங்கன்

## [கி. பி. 1070—1120]

**1. முதலாம் குலோத்துங்க சோழனின் படையெடுப்புகளை விளக்குக.**

முதலாம் இராஜேந்திரனுடைய மகள் வயிற்றுப் பேரனும், கீழைச்சாளுக்கிய மன்னன் இராஜராஜனுடைய மகனுமான முதலாம் குலோத்துங்கன் இளமைப் பருவத்தைத் தஞ்சையிலே கழித்தவன்.

கி. பி 1070-ல் அதிராஜேந்திரன் மகப்பேறின்றி இறந்ததினால், இராஜேந்திரன் (விஷ்ணுவர்த்தனன்) கங்கைகொண்ட சோழபுரத்திற்குத் தன்னுடைய பெரும் படையுடன் வந்து (இராசகேசரி) குலோத்துங்க சோழன் என்ற பெயருடன் முடி சூட்டிக்கொண்டு, சோழப் பேரரசையும், வேங்கி நாட்டையும் ஆளத்தொடங்கினான்.

### படையெடுப்புகள்

1. **சக்கரக் கோட்டம்;** விஷ்ணுவர்த்தனனாக வேங்கியில் ஆட்சி செய்துகொண்டிருந்தபொழுது சக்கரக் கோட்ட மண்டலத்தில் ஆட்சி செய்துகொண்டிருந்த தாராவர்ஷனைப் போரில் வெற்றிகொண்டான்.

2. **சாளுக்கியப்போர்:** அச் சமயத்திலேயே மேலைச் சாளுக்கியரோடும் போர் நடத்தி வென்றான் எனத் தெரிகின்றது. இப்போரில் ஹாய்சள மன்னன் எரிபங்கனும், கடம்பகுல மன்னனான ஜயகேசியும், திரிபுவனமல்ல பாண்டியனும், தேவகிரி யதுகுல மன்னன் சேவுணனும் சாளுக்கிய விக்கிரமாதித்தனுக்கு உதவி அளித்தனர். கோலார் மாவட்டத்திலுள்ள நிங்கிலி என்ற இடத்தில் நடைபெற்ற இப்போரில் குலோத்துங்கன் வெற்றி அடைந்ததோடு, விக்கிரமாதித்தனைப் புறமுதுகிடச் செய்தான். மீண்டும் அதன் இடைப்பட்ட மணலூர், அளத்தி போன்ற இடங்களில் புறங்கண்டான். அளத்தியிலும், நவிலையிலும் காணப்பெற்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட யானைகளைக் கவர்ந்து

கொண்டான். மீண்டும் துங்கபத்திரையில் நடைபெற்ற அதே போரில் விக்கிரமாதித்தனும், அவனது சகோதரன் ஜெயசிங் கனும் தோல்வியுற்றுப் புறம்காட்டினர். இவ்வாறு கங்க மண்டலமும், கொண்கானமும் குலோத்துங்கன் வசமாயின.

3. **பாண்டிய நாட்டுப் போர்:** மேலைச் சாளுக்கியருடன் நடைபெற்ற போருக்குப்பின் தென் பகுதியிலுள்ள பாண்டியரைத் தாக்க ஐந்து ஆண்டுக் காலம் தன்னைத் தயார் செய்துகொண்ட குலோத்துங்கன் பாண்டியர் ஐவரையும் வென்று, அவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தான்.

> "விட்ட தண்டெழ மீனவர் ஐவருங்
> கேட்ட கேட்டினைக் கேட்டிலை போலுநீ" (கலிங்-11)

வெற்றிபெற்ற குலோத்துங்கன் பல வெற்றித்தூண்களை நிறுவி, முத்துச் சலாபத்திற்குரிய இடங்களையும், பொதியிற் கூற்றத்தையும், சைய மலையையும், கன்னியாகுமரிப் பகுதியையும் கைப்பற்றி, பின்னர் அப்பகுதிகளை மீண்டும் அவர்களுக்கே அளித்துக் கப்பம் கட்டுமாறு பணித்தான்.

4. **சேர நாட்டுப் போர்:** அதிராஜேந்திரன் காலத்தில் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திப் பாண்டியர்போல் சேரர் தன்னாட்சி பெற்று ஆட்சிபுரியத் தொடங்கினர். திருவனந்த புரத்திற்கருகிலுள்ள விழிஞம், காந்தளூர்சாலை, கோட்டாறு ஆகிய இடங்களில் சேரரை வென்று திறை செலுத்துமாறு ஆணையிட்டு மீண்டும் தாயகம் திரும்பினான். அப்படை யெடுப்பில் காந்தளூர்ச் சாலையில் கப்பற் படையை இருமுறை அழித்து, கோட்டாற்றையும் தீக்கிரையாக்கினான்.

5. **கலிங்கப் படையெடுப்புகள்:** குலோத்துங்கன் காலத்தில் இருமுறை கலிங்கர் படையெடுப்புகள் நடைபெற்றன என்பதை அறியலாம். கோதாவரியாற்றிற்கும் மகேந்திரகிரிக்கும் இடைப்பட்ட வங்காளக் கடலைச் சார்ந்த பகுதி தென் கலிங்கம் என்று அழைக்கப்பட்டது. அப் பகுதியில் சோழ அரசப் பிரதி நிதியாக குலோத்துங்கனின் புதல்வன் விக்கிரம சோழன் இருந்து வந்தான். அச் சமயத்தில் தென் கலிங்க வேந்தன் வீமன் தன்னாட்சி பெறும் பொருட்டுக் கலகம் செய்தனன். இதனை அறிந்த விக்கிரம சோழன் வேங்கியிலிருந்து பெரும் படையுடன் சென்று வீமனை அடக்கி மீண்டும் தனக்குக் கப்பம் செலுத்தச் செய்தான்.

இவனது 42-ம் ஆண்டு கல்வெட்டொன்று (கி. பி. 1112) வடகலிங்கப் போரைக் குறிப்பிடுகின்றது; கலிங்கத்துப்பரணியும் விளக்கமாகக் கூறுகின்றது. வட கலிங்கத்தை அனந்தவர்மன் ஆட்சி செய்து வந்தான். குலோத்துங்கனுக்கு இருமுறை திறை கொடாத காரணத்தால் கருணாகரத் தொண்டைமான் தலைமையில் ஒரு பெரும் படையை அனுப்பி ஏழு கலிங்கத்தையும் வென்று வரும்படி உத்தரவிட்டான். கருணாகரன் தலைமையில் சென்ற படைகள் பாலாறு, குசைத்தலை, பொன்முகரி, கொல்லி, பெண்ணையாறு, மண்ணாறு, குன்றி, கிருஷ்ணாநதி, கோதாவரி, பம்பாநதி (வடபெண்ணை), கௌதவி ஆகிய ஆறுகளைக் கடந்து சென்றன. வடபகுதியில் செல்லும் வழியெல்லாம் காணப்பட்ட பல நகரங்கள் தீக்கிரையாயின. அனந்தவர்மன் பெரும் படையுடன் கருணாகரனை எதிர்க்கத் தலைப்பட்டான்; ஆனால் அப்பொழுது நடந்த பெரும் போரில் அனந்தவர்மனின் படைகள் புறமுதுகிட்டு ஓடின. பெரும் வெற்றி பெற்ற கருணாகரன் ஆயிரக்கணக்கான யானைகள், குதிரைகள், தேர்கள், ஒட்டகங்கள், மணிக்குவியல்கள், பெண்டிர் ஆகிய அனைவற்றையும் கைப்பற்றி குலோத்துங்கனுக்குப் பெருமை சேர்த்து நாடு திரும்பினான்.

6. **ஈழநாட்டுப் போர்:** அதிராஜேந்திரன் மறைவிற்குப்பின் ரோகணத்திலிருந்த தங்கள் இளவரசனான முதலாம் விஜயபாகுவை அழைத்துவந்து 1073-ல் முடிசூட்டி, ஈழ நாட்டின் மன்னனாக்கினார். சோழர் படைகள் தமிழகத்திலிருந்து வந்த போதிலும், விஜயபாகு பெரும் அரண் அமைத்து பொலனருவா, அனுராதபுரம் ஆகிய நகரங்களைத் தாக்கி சோழப் படைகளைத் தோற்கடித்து, ஈழ நாடு முழுவதையும் கைப்பற்றிக்கொண்டான். அதுமுதல் சோழர் ஆதிக்கம் அகன்றது என்று கூறலாம்.

7. **கங்கபாடியும் வேங்கி நாடும்:** 1116-ம் ஆண்டில் 'தலைக்காடு கொண்ட அரசன்' என்று தன்னை ஹொய்சாள மன்னனான பிட்டிக விஷ்ணுவர்த்தனன் கூறிக்கொள்கின்றான். தலைக்காடு கங்க பாண்டியனின் தலைநகரமாகும். அதனைச் சோழர்களிடமிருந்து கைப்பற்றினான். குலோத்துங்க சோழன் நாட்டிற்கு வந்தபிறகு, தன் புதல்வர்களை அனுப்பி 1093 வரை ஆட்சிபுரியவைத்திருந்தான். 1093 முதல் 1118 வரை விக்கிரம சோழன் என்ற மற்றொரு புதல்வன் வேங்கியில் ஆட்சி புரிந்தான். மேலும், வேங்கி நாட்டிலிருந்து சோழநாடு வந்த பொழுது வேங்கி நாடு பெரும் குழப்பத்திற்குள்ளாகியது. அதனைப் பயன்படுத்திக்கொண்டு சாளுக்கிய விக்கிரமாதித்தன்

வேங்கி நாட்டைக் கைப்பற்றி ஆட்சி புரியத் தொடங்கினான். இவ்வாறு ஈழமும், வேங்கி நாடும் குலோத்துங்கன் காலத்தில் சோழப் பேரரசிடமிருந்து பிரிந்து சென்றன.

8. **சீனாவுடன் நல்லுறவு:** கி.பி. 1077-ல் எழுபத்திரண்டு பேர்களைக் கொண்ட குழுவைச் சோணாட்டிலிருந்து சீனாவிற்கு அனுப்பியதாக சீனாவில் காணப்படும் குறிப்புக்கள்மூலம் தெரிகின்றது.

9. **கடாரத்துடன் தொடர்பு:** கி. பி. 1090-ல் கடாரத்து மன்னன் வேண்டிக்கொண்டதிற்கிணங்க நாகப்பட்டினத்திலிருந்த இராஜராஜப் பெரும்பள்ளி, இராஜேந்திர சோழப்பெரும்பள்ளி ஆகிய இரண்டு புத்த விகாரங்களுக்கும் இறையிலியாகச் சில ஊர்களை அளித்தான். ஆசிரியர் ஜெயங்கொண்டார் "பரக்கு மோதக் கடாரமழித்த நாள்," என்று கலிங்கத்துப் பரணியில் குறிப்பிட்டிருப்பது இதற்குத் தக்க சான்று.

10. **காம்போஜ நாட்டுறவு:** காம்போஜ (கப்போடியா) நாட்டு மன்னன் ஹர்ஷவர்மன் குலோத்துங்கனுக்குக் காட்சிப் பொருளாகக் காட்டிய கல்லை இவன் பெற்று வந்து தில்லைச் சிற்றம்பலத்தில் வைத்தான்.

11. **கன்னோசி நாட்டுறவு:** கன்னோசி மன்னன், குலோத்துங்கன் காலத்தில் தமிழகம் வருகைபுரிந்தான். மேலும் கன்னோசியினர் சூரிய வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்தது போலவே, குலோத்துங்கனும் சூரியனுக்குக் கோயில் எடுப்பித்து அதற்குக் குலோத்துங்க சோழ மார்த்தாண்டாலயம் எனப் பெயரிட்டான்.

12. **சுங்கம் தவிர்த்த சோழன்:** நாட்டின் மேம்பாட்டைக் கருதி நாட்டில் நிலவிய சுங்கவரியை நீக்கினான். அதனால் மக்கள் மனம் மிக மகிழ்ந்து 'சுங்கம் தவிர்த்த சோழன்' என்று அழைத்தனர். **'சுங்கம் தவிர்த்திருள் நீக்கி உலகாண்ட ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்'** என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றான். கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர், "புவிராஜ ராஜ மனு முதலானோர் நாளில் தவிராத சுங்கந் தவிர்த்தோன்," என்று கூறியுள்ளார்.

13. **நில அளவை:** இவனது ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற மற்றொரு முக்கியச் செயல், 16ஆம் ஆண்டில் நிலங்கள் அனைத்தும் உள்ளவாறு அளந்து நிலவரியை முறைப்படுத்தியதாகும்.

14. **சமய நிலை :** அவனுடைய சைவ ஈடுபாடுபற்றி 'திருநீற்றுச் சோழன்' என்று போற்றப்படுகின்றான். சூரிய வழி பாட்டிற்காக இவனே முதன்முதலாகத் தமிழ்நாட்டில் சூரியனார் கோயிலைக் கட்டுவித்தான். மற்றும் வேம்பற்றூர் திருவிய லூருக்கு அடுத்த கர்க்கடேச்சுவரருக்குக் கோயிலும் முன் மண்டபமும்; கீழைப்பழூவூர், திருவைக்காவூர், கோட்டாறு ஆகிய இடங்களில் கற்றளிகளும் எழுப்பினான். வைணவ விண்ணகரத்திற்கும், பௌத்தப் பெரும் பள்ளிக்கும் பெரும் நிலதானம் செய்துள்ளான்.

இவன் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்தும் முதன்முறை யாகக் காஞ்சியிலிருந்தும் ஆட்சிபுரியத் தொடங்கினான்.

# 5. குலோத்துங்கனின் பின்தோன்றல்கள்

**விக்கிரம சோழன், 1118–32 :** தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பல அரிய நற்பணிகள் செய்வித்தான். ஒட்டக்கூத்தர் அவைக் களப் புலவராக இருந்தார்.

**இரண்டாம் குலோத்துங்கன், 1133—50 :** விக்கிரம சோழன் காலத்தில் இளவலாக இருந்தபொழுது இராமானுஜரை நாடு கடத்தியவர் இவரே. மற்றும் தில்லைக்கோயிலிலிருந்த கோவிந்தராஜர் (உற்சவர்) கடலில் தூக்கி எறியப்பட்டதும் இவர் காலத்திலேயே.

**இரண்டாம் இராஜராஜன், 1150—63 :** தாராசுரத்தில் இராஜ ராஜேச்சுரம் என்ற ஒரு பெரும் கோயிலைக் கட்டுவித்தான்.

**மூன்றாம் இராஜதிராஜன், 1163—79 :** பாண்டிய நாட்டு அரியணைப் போட்டியில் தலையிட்டு வெற்றி பெற்றதோடு இலங்கைமீதும் போரிட்டு வெற்றிபெற்றான். அதனால் மதுரையும் ஈழமும் கொண்ட 'கோ' இராஜகேசரிவர்மன் என்று சிறப்பிக்கப்பட்டான்.

**மூன்றாம் குலோத்துங்கன், 1179—1216 :** மூன்றாம் இராஜ ராஜன் (1216—1246), மூன்றாம் இராஜேந்திர சோழன் (1246—1279) ஆகிய மூவரும் திறமையுடன் ஆட்சி செய்தபோதிலும், பாண்டியரின் எழுச்சிக்கும் தந்திரத்திற்கும் பலியாகி இராஜேந் திரன் காலத்தில் சோழப் பேரரசு வீழ்ச்சியுற்றது.